## Advisory Board for salt works

* 173. *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Advisory Board for salt has been set up in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) உப்பு—தொடர்பான இரசாயனப் பொருட்களுக்கான தமிழ் நாடு வாரியம் ஒன்றை அமைத்து அரசு 1971 பிப்ரவரித் திங்களில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. தொழில் துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராவர். தொழில் வாணிபத்துறை இயக்குநர் இதன் செயலாளராவர். இதில் மற்றும் 13 உறுப்பினர்கள் இருப்பர். அடுத்தடுத்து உள்ள பகுதிகளில் பெரிய உப்பளங்கள் அமைப்பது குறித்துத் திட்டமிடுதல், அவற்றை அமைத்தல், உப்பின் தரத்தை உயர்த்துவதில் தொழில் நுட்ப உதவியளித்தல், உப்பு ஏற்றுமதி செய்தல், உப்பை அடிப்படையாகக் கொண்ட கடல் இரசாயனத் தொழிற் சாலைகளைத் தொடங்குதல் ஆகியவை குறித்த கொள்கை பற்றி அரசுக்கு ஆலோசனை நல்குவது இவ்வாரியத்தின் முக்கிய அலுவல்களாகும்.

**திரு. என். டென்னிஸ்:** உப்பின் தரத்தை உயர்த்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** குருநாத் அறிக்கையில் சுமார் 40,000 ஏக்கராவில் உப்பைத் தரமுள்ளதாக உற்பத்தி செய்வதற்கு 15 ஆண்டுத் திட்டம் ஒன்றை அவர் சிபார்சு செய்திருந்தார். அதை நிறைவேற்றுவதற்கு சுமார் 4.6 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். அவருடைய யோசனையின் மீது, இந்த 40,000 ஏக்கராவில் கிழக்குக் கடற்கரை முழுவதும் பல இடங்களில் உற்பத்தி செய்கின்ற முயற்சியில் ஈடுபடும் போது, தரமுள்ள உப்பாக உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தமிழ் நாட்டில் எங்கெங்கெல்லாம் உப்பு அதிகமாக உற்பத்தி ஆகிறது? கன்யாகுமரியில் உப்பு தாராளமாகக் கிடைக்கிறது. கன்யாகுமரியையும் அரசு இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எந்தெந்த இடம் என்கிற விவரம் இல்லை. கிழக்குக் கடற்கரை முழுவதும், எங்கெங்கே இந்த வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த முயற்சிகளை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, இந்த உற்பத்தியின் அடிப்படையில், ஏற்றுமதிக்கு எந்த அளவு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் ஆராய்ந்து வருகிறோம். ஜப்பான் நாட்டுக்கு நாம் தரமுள்ள உப்பை கொடுக்க இசைந்தால் அவர்கள் ஏராளமாக வாங்குவதற்குத் தயார் என்று கூறியுள்ளார்கள். அந்த அடிப்படை நோக்கத்தையும் கருத்தில் கொண்டு இதனுடைய வளர்ச்சி பற்றி சிந்திக்கப்படும்.

1971 ஜுலை 12]

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether there is any proposal on hand to start an industry on the basis of salt that is available in the southern districts?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தூத்துக்குடியில் உப்பின் அடிப்படையில் பல தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும் என்ற முயற்சி இப்பொழுது இருக்கிறது. உதாரணத்திற்கு, சோடா ஆஷ் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அங்கே அனுமதி நமக்குக் கிடைத்திருக்கிறது. இதுபோல் இன்னும் பல இடங்களில் அங்கே அமைக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தாமரைக்குளத்தில் உப்பு இப்பொழுது எடுக்கப்படுகிறது. அதனுடைய தரத்தை உயர்த்துவதற்கு வகை செய்யப்படுகிறதா? தமிழ்நாட்டில் தயாரிக்கும் உப்பின் தரம், ராஜஸ்தான் உப்பின் தரத்தின் அளவுக்கு இல்லை என்று சொல்கிறார்களே அது உண்மையா? அப்படியானால், மேட்டூர் கெமிகல்ஸ் போன்றோர் எடுக்கக்கூடிய உப்பின் தர அளவுக்காவது பல இடங்களில் எடுக்கும் உப்பின் தரத்தை உயர்த்த வாரியம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம் செயல்படத் தொடங்கவில்லை. குஜராத் மாநிலத்தில் உப்பு உற்பத்தி மிக உன்னதமான முறையில் நடைபெறுகிறது என்று அரசு அறிந்து அந்த அடிப்படையில் இந்த வாரியம் செயல்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தியின் காரணமாக அங்கிருக்கும் உப்பளத் தொழிற்சாலையைக் காலி செய்யச் சொல்லி அரசு ஏதாவது உத்தரவு பிறப்பித்திருக்கிறதா? தூத்துக்குடி கடற்கரையோரத்தில் இப்பொழுது உப்பளங்கள் இருக்கும் இடத்தைத் தவிர வேறு இடங்களில் உப்பு உற்பத்திக்கு வாய்ப்பு இருக்கிறது. துறைமுகத்தை ஒட்டியுள்ள உப்பளங்களை நாம் தொழிற்சாலைக்காக ஒதுக்கி வேறு இடங்களில் உப்பளங்களைத் தொடங்கவேண்டும் என்று ஏற்பாடு செய்து வருகின்றோம்.

*Commencement of Production by Southern Structurals Limited*

* 174. *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Messrs. Southern Structurals Limited has started production from January, 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மெஸர்ஸ் சதர்ன் ஸ்டாக்சுரல்ஸ் கம்பெனித் தொழிற்சாலை 8—1—1971 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. இதில் நிறுவப்பட்ட இயந்திரக் கருவிகள் பாரந்தூக்கிப் பொறிகள் முதலியவற்றைப் பேணுவதற்கு அவசியமான சில பணியாளர்களோடு இத்தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டது. இத்தொழிற்சாலை படிப்படியாக வேலை செய்யத் தொடங்கி வருகின்றது. இதுவரையில் 242 பணியாளர்கள் மீண்டும்